# இராசிபுரம் நகராட்சி

## நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு

2023—ஆம் வருடம் அக்டோபர் மாதம் 27—ஆம் தேதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் : 21.10.2023

தலைவர்,
நகர் மன்றம்.

## பொருள்கள்

( 1 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் சுற்றித் திரியும் தெரு நாய்களுக்கு வெறி நோய் தடுப்பூசி செலுத்தவும், கருத்தடை அறுவை சிகிச்சை மேற்க்கொள்ளவும் விலங்குகள் பிறப்பு கட்டுப்பாடு விதிகள் 2023—இல் தெரிவித்துள்ளபடி, மேற்க்கொள்ள ஏற்படும் உத்தேச செலவினம் ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது. மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(4792/23/எச்1)**

**தீர்மானம் எண். 466**

அனுமதிக்கப்பட்டது

( 2 ) இராசிபுரம் நகராட்சியில் சாலையோரங்களிலுள்ள புற்களை வெட்டி எடுக்க புற்கள் வெட்டும் இயந்திரம் ஒன்று வாங்கவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ. 20000/—க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது. மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(4792/23/எச்1)**

**தீர்மானம் எண். 467**

அனுமதிக்கப்பட்டது

**( 3 )** இராசிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி அலுவலகம் பின்புறமுள்ள பாரதிதாசன் நடுநிலைப்பள்ளி அருகே உள்ள கழிப்பிடம் பாழடைந்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் அதனை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் அனுமதி பெற்று மேற்படி கட்டிடத்தை இடிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

(4780/23/இ1/)

**தீர்மானம் எண். 468**

அனுமதிக்கப்பட்டது

( 4 ) நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 5990/2022/ SBM2. நாள் 08.09.2023–ஆம் தேதிய கடிதத்தில் 2023–2024–ஆம் ஆண்டிற்கு SBM 2.0 திட்டத்தின்கீழ் இந்நகராட்சிக்கு புதியதாக பொதுக்கழிப்பிடம் (Public Toilet) அமைக்க ரூ. 36.28 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி ஒதுக்கீடு செய்யப்பட்டத் தொகைக்கு கீழ்க்கண்ட இடத்தில் பொதுக்கழிப்பிடம் கட்ட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விவரம் | மதிப்பீட்டுத்தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண். 21–இல் காளி தெருவில் பொதுக்கழிப்பிடம் கட்டும் பணி | 36.28 |

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(4779/23/இ1)

**தீர்மானம் எண். 469**

அனுமதிக்கப்பட்டது

( 5 ) இராசிபுரம் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை பொதுமக்கள் அறியும் வகையில் மாலை மலர் தொழில் மலரில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பரக்கட்டணம் ரூ. 9,900/–ஐ Malar Publication limited என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4689/23/இ1)

**தீர்மானம் எண். 470**

அனுமதிக்கப்பட்டது

( 6) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள தினசரி சந்தை கட்டிடத்தின் சுற்றியுள்ள பகுதிகளில் தளம் அமைக்கப்படாமலுள்ள மண் தரை பகுதியில் சிமெண்ட் தளம் அமைக்கவும் மற்றும் பாதுகாப்பு சுவர் அமைக்கப்பட்டுள்ள பகுதியில் விடுபட்டுள்ள பகுதியில் சுற்றுசுவர் அமைக்க வேண்டியுள்ளது. எனவே, மேற்க்கண்டப் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 12.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4762/23/இ1)

**தீர்மானம் எண். 471**

அனுமதிக்கப்பட்டது

(7) இராசிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 7–இல் உள்ள மாரப்பன் தெரு பகுதியில் புதியதாக குடிநீர் குழாய் நீட்டிப்பு ( 3" PVC ) பணி செய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்படி இடத்தில் பொதுமக்கள் நலன் கருதி குடிநீர் குழாய் நீட்டிப்பு செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 90000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4783/23/இ1)

**தீர்மானம் எண். 472**

அனுமதிக்கப்பட்டது

(8) இராசிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 27–இல் உள்ள ஏரிக்கடைக்கால் ரோட்டிலுள்ள பொதுக்கழிப்பிடம் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி அதனை பழுது நீக்க பணிகள் மேற்க்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 3.00 இலட்சத்திற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4784/23/இ1)

**தீர்மானம் எண். 473**

அனுமதிக்கப்பட்டது

(9) இராசிபுரம் நகராட்சியிலுள்ள ஆத்தூர் மெயின் ரோட்டில் ஆஞ்சநேயர் கோவில் முதல் காஞ்சி சூப்பர் மார்க்கெட் வரை நெடுஞ்சாலை துறையின் மூலம் பாலம் அமைத்தல் பணி, தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் மூலம் குடிநீர் குழாய் அமைத்தல் பணி நடைபெற்றதில் அந்தப் பகுதியில் குடிநீர் இணைப்புகள் அனைத்தும் பழுதடைந்து உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மற்றும் பாலத்தின் குறுக்கே நகராட்சிக்குச் சொந்தமான 200 MM PVC நீரேற்று குழாய் உடைக்கப்பட்டதை மாற்றியமைத்தல் பணி மற்றும் ஆஞ்சநேயர் கோவில் முதல் வாசவி மஹால் வரை 150 மீட்டர் நீளத்திற்கு 4" PVC குழாய் அமைத்தல் பணிகள் மேற்க்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணிகள் மேற்க்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4788/23/இ1)

**தீர்மானம் எண். 474**

அனுமதிக்கப்பட்டது

( 10 ) இராசிபுரம் நகராட்சியிலுள்ள ஆத்தூர் மெயின்ரோட்டில் ஆஞ்சநேயர் கோவில் முதல் காஞ்சி சூப்பர் மார்க்கெட் வரை நெடுஞ்சாலை துறையின் மூலம் பாலம் அமைத்தல் பணி, தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் மூலம் பைப்லைன் அமைத்தல் பணி நடைபெற்றதில் அந்தப் பகுதியிலுள்ள பாதாள சாக்கடை இணைப்புகள் பழுதடைந்து உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே, மேற்க்கண்ட பாதாள சாக்கடை இணைப்புகளை சீரமைப்பு செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 95000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4787/23/இ1)

**தீர்மானம் எண். 475**

அனுமதிக்கப்பட்டது

( 11 ) இராசிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 17—இல் வரதன் தெரு பகுதியில் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்காக உள்ள ஆழ்துளைக் கிணற்றின் தண்ணீரை பொதுமக்களுக்கு சப்ளை செய்ய புதியதாக அமைக்கப்படும் கழிப்பிடத்தின் மேல் தளத்தில் 3000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து அனைத்து தெருக்களுக்கும் பைப் லைன் அமைத்து தண்ணீர் வசதி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4789/23/இ1)

**தீர்மானம் எண். 476**

அனுமதிக்கப்பட்டது

( 12 ) இந்நகராட்சி நகர் மன்றத் தலைவர் அவர்களின் அலுவலக ஈப்பு வாகன எண். TN 28 CZ 6001-க்கான இரண்டாவது இலவச சர்வீஸ் செய்வதற்கான செலவுத் தொகை ரூ. 5317/—ஐ திரு மா. ஸ்ரீ கோகுல்நாத், இருக்கை எழுத்தர் அவர்களால் செலவு செய்யப்பட்டதால், மேற்படி தொகையை திரும்ப நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(3602/22/இ2)

**தீர்மானம் எண். 477**

அங்கீகரிக்கப்பட்டது

(13) இந்நகராட்சி நகர் மன்றத் தலைவர் அவர்களின் அலுவலக ஈப்பு வாகன எண். TN 28 CZ 6111-க்கான நான்காவது இலவச சர்வீஸ் செய்வதற்கான செலவுத் தொகை ரூ. 12218/—ஐ திரு ப. சீரங்கன், ஓட்டுநர் அவர்களால் செலவு செய்யப்பட்டதால், மேற்படி தொகையை திரும்ப நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

(3602/22/இ2)

**தீர்மானம் எண். 478**

அங்கீகரிக்கப்பட்டது

(14) இராசிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 17—இல் உள்ள வரதன் தெரு பகுதியிலுள்ள கழிப்பிடம் கட்டப்பட்டு 40 ஆண்டுகள் மேலாவதால் கட்டிடம் முழுவதுமாக இடிந்து பழுதடைந்துள்ளது. எனவே, மேற்படி கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(4789/23/இ1)

**தீர்மானம் எண். 479**

அனுமதிக்கப்பட்டது

ஒம்/— முனைவர் இரா. கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி.